பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்


# வலம்புரி
VALAMPURI

பக்கங்கள் எட்டு
விலைரூபா 5.00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (18 - 08 - 2000) VALAMPURI ஒலி: 242


உள்ளே!

விஞ்ஞானம் பகுதி- 1

சமுர்த்தி நேர்முகப் பரீட்சை பெயர்ப் பட்டியல்

பொது அறிவு

★ அரசும் - விடுதலைப்புலிகளும்

# விட்ட இடத்தில் இருந்து பேச்சை ஆரம்பிக்க நோர்வே அரசு உதவும்!

## நோர்வேயின்முன்னாள்பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு அலுவலக நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குதமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமரசப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சமாதானக் கனவானது நிதர்ஷன வடிவில் இருக்க வேண்டும் இனப் பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசு எடுக்கவிருக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் சகல விதமான ஒத்துழைப்பும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்-

இவ்வாறு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அமரர் ஏ.ஸி.எஸ். ஹமீத்தின் 1 அம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நோர்வேயின் முன்னாள் பிரதமர்கேஜில்மட்னிபூடிணிக் குறிப்பிட்டார்.

உலக சமாதானத்தை முன்னெடுக்கும் நிறுவனமான 'வேர்ல் டுவியூ' என்னும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாதற்கொலைத் தாக்குதல் கொலையாளியின் தலை மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா நகர சபை வாசவில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய தற்கொலையாளியின் தலைப்பகுதி மட்டும் சேதமடையாத நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் உடல் பகுதி சிதறியநிலையில் வவுனியா ஆதார வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக் குண்டுத் தாக்குதல் நன்கு திட்டமிட்டு லெப்டினண்ட் பாலசூரியாவை இலக்குவைத்துநடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தருகையில்: லெப்டினண்ட் பாலசூரியாவும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ தேர்தல் திருத்தச்சட்ட மூலத்தை

## பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க

## திருத்தவேலைகள் இருந்த போதிலும் நல்லூர் உற்சவத்தால் சேவை தொடரும் உரிமையாளர் "வலம்புரிக்கு" தகவல்

[திருமலை]

யாழ்ப்பாணத்துக்கும் திருமலைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டிருக்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவத்தையொட்டித் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடவுள்

(8 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் அஷ்ரப் வரதராஜப்பெருமாள் சந்திப்பு;தேர்தல் குறித்து ஆராய்ந்தனர்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இப்பேச்சுக்களின் போது ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ திருமலை மாவட்ட தேர்தல்

## சூரியமூர்த்தி தலைமையில் சுயேட்சைக்குழு போட்டி?

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் முன்னாள் திருமலை நகரசபைத் தலைவர், எஸ். சூரியமூர்த்தி தலைமையில்சுயேட்சைக்குழு ஒன்று திருமலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது.

இதுசம்பந்தமான கூட்டமொன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சில்வெஸ்டர் ஹோட்டலில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை சூரியமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

(வ)

## கிளிநொச்சியில் மேலும் இரண்டு

தலைமையில் சுயேட்சைக்குழு ஒன்று திருமலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது.

...கான ஏற்பாடுகளை சூரியமூர்த்தி மேற்கொண்டுள்ளார். (வ)

# பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு பகீரதப்பிரயத்தனம்!

[கொழும்பு]

தேர்தல் சட்டத்தை திருத்தி அமைப்பதற்கான 17வது திருத்த சட்டமூலத்தை அரசு பாராளுமன்றத்தை கலைப்பதற்குமுன்னதாக சமர்ப்பிப்பதற்கு அரசு பகீரதப்பிரயத்தனம் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சர் அஷ்ரப், 'புளொட்' தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனைச்சந்தித்து தேர்தல் சட்டமூலதிருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவு தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த சித்தார்த்தன் எம்.பி. அடுத்த தேர்தலில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று அரசியல் அமைப்பை நிறைவேற்றுமென்றால்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் மேலும் இரண்டு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டது

[வவுனியா]

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் இரண்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி சேவியர் கடைக்கு அருகிலுள்ள ஆற்றுப்படுக்கையிலிருந்து ஒரு எலும்புக்கூடும் உதயநகர்ப் பகுதியிலிருந்து நைலோன் கயிற்றினால் கட்டப்பட்ட நிலையில் மற்றோர் எலும்புக்கூடும் மீட்கப்பட்டது.

இரண்டு எலும்புக் கூடுகளும் மருத்துவ பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(8ஆம்பக்கம் பார்க்க)

### யாழ். மத்திய கல்லூரியில்

# மக்கள் குறைகேள் செயலமர்வு இன்றும் நாளையும் நடைபெறும்

[கொழும்பு]

யாழ். மாவட்டப் பொது மக்களின் குறைகளையும் தேவைகளையும் நிவர்த்திக்கும் குறைகேள் செயலமர்வு வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவின் தலைமையில் யாழ். மத்திய

(8ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திரக் கட்சியின் செயலராக அமைச்சர் திஸநாயக்கா

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலராக அமைச்சர் எஸ்.பி. இஸநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நேற்று அலரி மாளிகையில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

### ★ பட்டலந்தை வதைமுகாம் வழக்கு

# வேறு நீதிமன்றுக்கு மாற்றுமாறு கம்பஹா நீதிபதி வேண்டுகோள்

### 29 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸின் வழக்கு இம்மாதம் 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று முன்தினம் கம்பஹா நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போதே 29ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரான டக்ளஸ் பீரிஸை தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்குமாறு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் ஜராங்கனி பெரேரா உத்தரவிட்டதுடன் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தவழக்கைத் தான் நடத்த விரும்பவில்லை என்றும் இவ்வழக்கைப் பிறிதொரு நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறும் தெரிவித்துள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணத்திலும் பத்திரிகையை நடத்தலாம் என நிரூபித்தவர் எஸ். எம். கோபாலரத்தினமே

## கருத்தரங்கில் புகழாரம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்திலும் பத்திரிகைத்துறையைத் திறம்படவும் வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் நடத்தலாம் என்பதைச் செயலுருவில் செய்து காட்டி முத்திரை பதித்தமுன்னோடிப் பத்திரிகையாளர் எஸ்.எம். கோபலாரத்தினம் (கோபு) என்பது யாவரும் அறிந்த விடயம். அவர் இங்கு பல பத்திரிகையாளர்களை உருவாக்கியுள்ளார். இன்றைய கால கட்டத்தில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பத்திரிகைத் துறையில் கால்பதித்துள்ள பலர் கோபுவின் பண்ணையில் வளர்ந்தவர்கள் என்று கூறுவதில் பத்திரிகை உலகம் நிச்சயம் பெருமைப் படுகின்றது.

இவ்வாறு கடந்த பௌர்ணமி தினத்தன்று யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள பத்திரிகையாளர் இ. சற்குருநாதன் இல்லத்தில் நடைபெற்ற வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில்மூத்த பத்திரிகையாளர் என். வாமதேவன் மேற்கண்டவாறுகூறினார்.

பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் அண்மையில் பாராட்டப்பட்ட பத்திரிகையாளர் எஸ். எம். கோபாலரத்தினத்தின் சேவைகள் திறமைகள் புற்றி பத்திரிகையாளர்கள் என். எஸ். திருச்செல்வம், எஸ். தில்லைநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினார்.

அத்துடன் துணிச்சலான பத்திரிகையாளர் என எடிட்ரேஸ்கில்ட்டினால் பாராட்டப்பட்ட பத்திரிகையாளர் குருநாதருக்கும் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

மேலும் அண்மையில் இந்தியாவில் செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் கொல்லப்பட்ட பி.பி.சி. செய்தியாளரின் மறைவு குறித்தும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களாவன,

★ வருடந்தோறும் வட இலங்கையில் சிறந்த பத்திரிகையாளரைத் தெரிவு செய்து பாராட்டுவது.

★ வட இலங்கை பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்கள் பற்றிய அங்கத்துவ விபரக்கொத்து ஒன்றினைத் தயாரித்து வெளியீடல் என்பனவாகும். (க-77)

## பிரதேச செயலர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பளை, மருதங்கேணி ஆகிய பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். பிரதேச செயலகப் பிரிவில் பதிவை மேற்கொண்டு ரூபா 2000/- கொடுப்பனவிற்கு முத்திரை ஒட்டி கையொப்பமிட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் உரிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உரியவர்கள் தமது வங்கிகளுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம். என யாழ். பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். [ஸ]

## உணவுப் பொருள் விநியோகம்

[மந்திகை]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பொது மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் என்பன தட்டுப்பாடு இன்றி விநியோகிக்கப் படுவதாகசங்கத்தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

[த-23]

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசிபோடும் பணியில் இன்று வெள்ளிக்கிழமை.

காலை 9.00 மணி தொடக்கம் மு. ப. 10.30மணிவரை கல்வியங்காடு இலங்கை நாயகி சனசமூக நிலையத்திலும்,

மு.ப.11.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை கல்வியங்காடு கலைமகள் வீதி கலைமகள் சனசமூக நிலையத்திலும்:

பி. ப. 12. 30 மணிதொடக்கம் பி: ப. 1. 30 மணி வரை கல்வியங்காடு விநாயகர் வீதி நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

NOTICE

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் 17-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 146400 ஏ | 146400 பி |
| 150573 ஏ | 150573 பி |
| 150669 ஏ | 150669 பி |
| 150669 சி | 150682 ஏ |
| 150762 ஏ | 150762 பி |
| 150762 சி | 151914 ஏ |
| 151914 பி | 151983 ஏ |
| 151983 பி | 151983 சி |
| 151991 ஏ | 151991 பி |
| 151991 சி | 151991 டி |
| 151991 ஈ | 152076 ஏ |
| 152076 பி | 152076 சி |
| 152080 ஏ | 152086 ஏ |
| 152099 ஏ | 152099 பி |
| 152143 ஏ | 152161 ஏ |
| 152161 பி | 152161 சி |
| 152182 ஏ | 153276 ஏ |
| 155100 ஏ | 155100 பி |
| 155125 ஏ | 155171 ஏ |
| 155172 ஏ | 155222 ஏ |
| 155240 ஏ | 155294 ஏ |
| 157777 ஏ | 157777 பி |
| 157780 ஏ | 157781 ஏ |

யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 137180 ஏ | 137180 பி |
| 137180 சி | 144274 ஏ |
| 144274 பி | 144349 ஏ |
| 144349 பி | 144349 சி |
| 147938 ஏ | 147938 பி |
| 147938 சி | 149819 ஏ |
| 149819 பி | 159819 சி |
| 152364 பி | 152364 சி |
| 152437 ஏ | 152457 ஏ |
| 152457 பி | 152457 சி |
| 152874 ஏ | 152874 பி |
| 152928 ஏ | 152928 பி |
| 152928 சி | 154017 ஏ |
| 154017 பி | 154017 சி |
| 154020 ஏ | 154020 பி |
| 154077 ஏ | 154123 ஏ |
| 154123 பி | 154167 ஏ |
| 154167 பி | 154167 சி |
| 154167 டி | 154167 ஈ |
| 154205 ஏ | 154213 ஏ |
| 154213 பி | 154213 சி |
| 154219 ஏ | 156243 ஏ |
| 156243 பி | 156246 ஏ |
| 156246 பி | 156246 சி |
| 156307 ஏ | 156320 ஏ |
| 156387 ஏ | 156415 ஏ |
| 156422 ஏ | 156467 ஏ |
| 150374 ஏ | 150752 ஏ |
| 150752 பி | 150752 சி |
| 150752 டி | 151764 ஏ |
| 151764 பி | 152164 ஏ |
| 152209 ஏ | 152210 ஏ |
| 152210 பி | 155108 ஏ |
| 155126 ஏ | 155141 ஏ |
| 155141 பி | 155206 ஏ |
| 155255 ஏ | 155355 பி |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 148295 ஏ | 148295 பி |
| 148296 ஏ | 148296 பி |
| 148296 சி | 148296 டி |
| 148298 ஏ | 148298 ஏ |
| 148298 பி | 151813 ஏ |
| 151860 ஏ | 151861 ஏ |
| 151861 பி | 151861 சி |
| 151861 டி | 151861 ஈ |
| 151936 ஏ | 152068 ஏ |
| 152068 பி | 152180 ஏ |
| 152194 ஏ | 153250 ஏ |
| 153250 பி | 155122 ஏ |
| 155123 ஏ | 155143 ஏ |

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தேசியகல்வியியற்கல்லூரிகளில் 3 ஆண்டு காலபயிற்சிநெறிகளை மேற்கொள்ள ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், விஞ்ஞாம், கணிதம், இந்துசமயம், இஸ்லாம், பரத நாட்டியம் உள்ளிட்ட 18 உயர் தொடர் பயிற்சி பாடநெறிகளுக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிமூலம் மேற்படி பாடநெறிகளுக்குதெரிவுசெய்யப்படும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, அட்டாளைச்சேனை, கற்றன் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயில அனுமதி வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

[உ]

## பொலிஸ் ஒருவர் பலி

கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்,

நேற்று முன்தினம் இரவு 10·00 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்திற் கருகே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

## இறை வணக்கமும் மலர்த் தெரிவும் செவ்வனே அமைவது சாலப்பொருத்தமே

''சலம்பூவொடுதூபம்மறந்தறியேன்'' என்பதுநாயன்மாரில்ஒருவரின் நல்வாக்கு- அந்த வகையில் இறைவணக்கமும் மலர்த்தெரிவும் செவ்வனே அமைதல் சாலப் பொருத்தமே. இதோ உங்கள் கவனத்திற்குச் சில குறிப்புகள்.

### வார புட்பம்

தாமரை, வெள்ளாம்பல், செங்கழுநீர், தகரச்செம்மலர், நெய்தல், வெண்டாமரை, நீலோற்பலம் என்பன ஞாயிறு முதல் சனி வரை இறை பூசைக்கு உகந்த தெரிவாகும்.

### வாரபத்திரம்

வில்வம் துளசி, விளாத்தி, மாதுளை, நாயுருவி, நாவல்,

அந்தி, அர்த்தயாமம், பிற்பகல் களிற்சாத்தும் அட்ட புட்பம்

மல்லிகை, காட்டுமல்லிகை, மகிழ், பவளமல்லிகை வெட்டிவேர், சண்பகம் சிறுசண்பகம் மருக்கொழுந்து

காலை முதலியகாலம் எல்லாவற்றிற்கும் உரிய அட்ட புட்பம்

புன்னை, வெள்ளெருக்கு சண்பகம், நந்தியவர்த்தனம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை.

### மாதபுட்பம்

முருக்கு, புன்னை, வெள்

## NOTICE

**Faculty Of Management Studies & Commerce**

UNIVERSITY OF JAFFNA SRILANKA

New Admissions, Academic Year 2000/2001 (A/L-1999 Batch)

ENGLISH PROFICIENCY TEST

The above test will be held at the Management Hall from 9.30 a m to 11.30 a.m on the Second of September 2000 (02-09-2000), Registered students are kindly requested to bring their letter of enrolment issued by the University of Jaffna.

REGISTRAR.
UNIVERSITY OF JAFFNA.
10.08.2000.
[C/723]

| | |
|---|---|
| 147938 சி | 149819 ஏ |
| 149819 பி | 159819 சி |
| 149819 டி | 149822 ஏ |
| 149901 ஏ | 149969 ஏ |
| 152353 ஏ | 152353 பி |
| 152353 சி | 152361 ஏ |
| 152361 பி | 152377 ஏ |
| 152377 பி | 152448 ஏ |
| 152496 ஏ | 152582 ஏ |
| 152582 பி | 152582 சி |
| 154014 ஏ | 154014 பி |
| 154018 ஏ | 154018 பி |
| 154018 சி | 154085 ஏ |
| 154085 பி | 154085 சி |
| 154085 டி | 154093 ஏ |
| 154093 பி | 154093 சி |
| 154093 டி | 154112 ஏ |
| 154112 பி | 154112 சி |
| 154112 டி | 154216 ஏ |
| 154216 பி | 154276 ஏ |
| 154276 பி | 154276 சி |
| 154278 ஏ | 156304 ஏ |
| 156304 பி | 156382 ஏ |
| 156399 ஏ | 156400 ஏ |
| 156402 ஏ | 156437 ஏ |
| 156402 பி | 156442 ஏ |
| 156442 பி | 156480 ஏ |
| 156493 ஏ | 156509 ஏ |
| 156509 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 133945 ஏ | 133945 பி |
| 149640 ஏ | 157658 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 144644 ஏ | 144644 பி |
| 144807 ஏ | 144807 பி |
| 149840 ஏ | 149923 ஏ |
| 149923 பி | 149923 சி |
| 149961 ஏ | 150238 ஏ |
| 150290 ஏ | 152364 ஏ |

| | |
|---|---|
| 153250 பி | 155122 ஏ |
| 155123 ஏ | 155143 ஏ |
| 155155 ஏ | 155277 ஏ |
| 155278 ஏ | 155278 பி |
| 155283 ஏ | 155289 ஏ |
| 155310 ஏ | 155311 ஏ |
| 155319 ஏ | 155320 ஏ |
| 155357 ஏ | 155357 பி |
| 155357 சி | 155473 ஏ |
| 155473 பி | 157713 ஏ |
| 157713 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 138242 ஏ | 151910 ஏ |
| 151911 ஏ | 155129 ஏ |
| 155129 பி | 155129 சி |
| 155220 ஏ | 155258 ஏ |
| 155258 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 143783 ஏ | 143783 பி |
| 143783 சி | 143783 டி |
| 144099 ஏ | 144099 பி |
| 144099 சி | 144209 ஏ |
| 150578 ஏ | 150728 ஏ |
| 151853 ஏ | 151878 ஏ |
| 151878 பி | 151878 சி |
| 151878 டி | 151878 ஈ |
| 152093 ஏ | 152189 ஏ |
| 152189 பி | 152189 சி |
| 152189 டி | 152204 ஏ |
| 152231 ஏ | 152231 பி |
| 152238 ஏ | 153236 ஏ |
| 155193 ஏ | 155203 ஏ |
| 155203 பி | 155210 ஏ |
| 155210 பி | 155210 சி |
| 155210 டி | 155231 ஏ |
| 155413 ஏ | 155413 பி |
| 155418 சி | 155451 ஏ |
| 155451 பி | 157712 ஏ |
| 157712 பி | |

(சு)

மாதுளை, நாயுருவி, நாவல், விஷ்ணுகாந்தி என்னும் ஏழு இலைகளும் முறையே ஞாயிறு முதல் சனி வரை இறை பூசைக்குரிய பத்திரங்கள் (இலை)

**காலையிற் சாத்தும் அட்ட புட்பம்**

அலரி, நாயுருவி, மல்லிகை, வெள்ளெருக்கு, வில்வம் ஏதேனும் ஒரு வெள்ளைப் பூ, வெள்ளை அடுக்கலரிப்பூ, நந்தியாவர்த்தம் என்பன.

**உச்சிக்காலத் தேசாத்தும் அட்டபுட்பம்**

பொன்னூமத்தை, புலிநகக் கொன்றை, வெண்பாதிரி வன்னி, செங்கத்தரி, மரமந்தாரை, வெண்காக்குணம், தும்பை.

முருக்கு, புன்னை, வெள்ளெருக்கு, அலரி, சண்பகம், கொன்றை, தும்பை, கத்தரி, பட்டி, தாமரை, செங்கழுநீர், மல்லிகை என்பன முறையே சித்திரை முதலிய பன்னிரு மாதங்களுக்கும் உரியவை.

**மலர்களும் தேவர்களும்**

வில்வமிலை, கொன்றைப்பூ சிவபெருமானுக்கு

அறுகம்புல் - விநாயகனுக்கு

வெட்சி, கடம்பப்பூ - முருகனுக்கு துளசி - திருமாலுக்கு

நீலோற்பலம் உமாதேவிக்கு

செந்தாமரைப்பூ - கலைமகளுக்கு நெய்தல் நீலோத்பலம் எல்லாத் தெய்வங்களிற்கும் உவப்பானவை. அச்ச உணர்வு தரும் தெய்வங்களிற்கு சிவப்பு நிறமலர்கள் விசேடம்.

# நெருப்புக் காய்ச்சல் தீவிரம்
# நோயாளர் பெரும் அவதிநிலையில்

காரைநகர் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக தெரிய வருகின்றது.

தற்போது நிலவும் வெப்பம் காரணமாக கரைநகர் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவுவதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வைத்திய வசதி பெறுவதில் பெரும் அசௌகரியங்கள் எதிர் நோக்கப்படுவதாகவும், இப்பகுதியில் அரச வைத்தியசாலை ஒன்று மட்டுமே ஒரு வைத்திய அதிகாரியுடன் இயங்கிவருவதனால் வைத்திய வசதியினைப் பெறமுடியாமல் நோயாளர் பெரும் அவதியுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[க-75]

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)

# மாதிரிப் பரீட்சை - 2000

## விஞ்ஞானம் ஆக்கம்:- மேஜா பஞ்சலிங்கம்

## பகுதி I

[நேற்றைய தொடர்]

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**பின்வரும் வினாக்களுக்கான பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

21) சமஅளவான இரண்டு 12 ஓம் தடைகளும் சமாந்தரமாகவும் அவற்றின் சேர்மானத்திற்கு தொடராக 6 ஓம் தடையும் இணைக்கப்பட்ட தடையின் பெறுமதிக்கு சமனான தடையுடைய மின்குமிழின் ஊடாக 0.5 A மின்னோட்டம் பாய்கிறதுகுமிழிற்கு குறுக்கேயுள்ள அழுத்த வேறுபாடு என்ன?
(1) 6 volt (2) 8 volt (3) 4 volt (4) 16 volt

22) 440 volt, 200Wl எனக் கணிக்கப்பட்டிருக்கும் மின்குமிழ் உயர் வலுவில் ஒளிரும் போது மின் குமிழின் ஊடாகப் பாயும் மின்னோட்டம்
(1) 444× 200 A (2) $\frac{440}{200}$ A (3) $\frac{200}{440}$ A (4) $\frac{440 \times 4440}{200}$

23) விலங்கு கலங்களில் காணப்படாததும் தாவரக் கலங்களின் கலமுதலுருவில் விசேடமாக காணப்படும் உடல்கள் பின்வருவனவற்றுள்?
(1) உருமணிகள் (2) நிறமூர்த்தங்கள் (3) இழைமணிகள் (4) அகமுதலுருச்சிறுவலைகள்

24) கூபர்க ஊது பத்திகளில் காணப்பட வேண்டுமெனக் கருத முடியாத இயல்பு பின்வருவனவற்றுள் எது?
(1) குறைந்த எரிபற்று நிலையைக் கொண்டஒரு பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல்
(2) தாழ்ந்த வெப்பநிலையில் ஆவியாகக் கூடிய பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல்
(3) குறைந்த மேற்பரப்பு அளவைக் கொண்டிருத்தல்
(4) குறைந்த பிரகாசத்துடன் எரிதல்

25) பாம்புகள் தொடர்பாக நிலவும் மூட நம்பிக்கை அல்லாதது எது?
(1) பாம்பு இனங்கள் யாவும் நஞ்சுத் தன்மை உடையவை
(2) பாம்பு நஞ்சுக்கு பரிகாரம்கிடையாது
(3) பாம்புகள் சுற்றாடல் சமநிலையை பேண உதவுகின்றன
(4) பாம்புகளைக்கண்ட இடத்தில் கொன்று விடவேண்டும்

26) பின்வரும் அலைவடிவங்களில் எது மிகக் குறுகிய அலை நீளத்தையும் கூடிய மீடிறனையும் உடையன?
(1) ஒலி அலைகள் (2) நுணுக்கு அலைகள் (3) X-கதிர்கள் (4) வானொலிஅலைகள் (Radio Reys)

27) அன்ரனோவ் விமானம் ஒன்று கடலின் அடியில் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் அலை?
(1) ஒளி அலை (2) T. V அலைகள் (தொலைக்காட்சிஅலை) (3) வானொலிஅலை
(4) ஒலி அலைகள்

28) சூரியன் உச்சியில் இருக்கும் போது கண்ணன் தனது மேசையின் மேற்பரப்பின் வழியே செல்லும் ஒளிக்கற்றைஒன்றை பெறவேண்டியிருப்பின், அக்கற்றையை தெறிக்கச் செய்வதற்கு தள ஆடி ஒன்றை தரையின் தளத்துடன் எந்தக் கோணத்தில் சாய்த்து வைத்தல் வேண்டும்;
(1) 90 பாகை (2) 45 பாகை (3) 60 பாகை (4) 75 பாகை

29) பகலிலே நுளம்பு கடித்த ஒருவருக்கு ஏற்படத்தக்கநோய்?
(1) மலேரியா (2) யானைக்கால் (3) டெங்கு (4) மூளைமலேரியா

30) எதிர்காலத்தில் புவியின் வெப்பம் அதிகரிப்பதற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது; இதற்கு முக்கிய காரணமாக அமைவது?
(1) கடல் மட்டம் உயர்தல் (2) வளிமண்டலத்திலே காபனீரொட்சைட்
(3) தொமின் கானலிகளில் இருந்து பிறப்பிக்கப்படும் வெப்பம் (4) ஓசோன் படையிலுள்ள துவாரம்

31) சணல் பயிரிடப்பட்ட ஒருதரையில் நைதரசன் வளத்தைக் கூட்டும் நோக்கத்துடன் பயிரிட ஏற்றது அல்லாத தாவரம் எது?
(1) உழுந்து (2) சணல் (3) மரவெள்ளி (4) பயிற்றை

32) மண்ணில் இருந்து நைதரசன் வெளியேற்றும் முறை
(1) விலங்குக் கழிவு மண்ணில் இடப்பட்டால் (2) இறந்த தாவரப் பகுதிகள் மண்ணில் சேர்தல்
(3) மின்னல் மழையின் போது (4) நைதரசன் இழக்கும் பக்றீரியாவின் செயற்பாட்டால்

# இராசி பலன்

18-8-2000
(ஆவணி 2 வெள்ளி)
திருதியை
பி. ப 1.36 வரை
உத்தரட்டாதி முழுவதும்
இராகுகாலம்
10.35-12.05
சுபநேரம்
6.05-7.35

**மேடம்**
எடுத்த காரியம் தாமதம், அலைச்சல், மன உளைச்சல்

**இடபம்**
பொருள் வரவு, மங்கள கரம், காரிய வெற்றி

**மிதுனம்**
நினைத்த காரியம், அதி காரம், தொழில் கஷ்டம்

**கடகம்**
மனச்சஞ்சலம், உணர்ச்சி வசம், பிரயாணம்

**சிங்கம்**
வியாதி, உறவினர் பகை, வீண்செலவு

**கன்னி**
திருமணப் பேச்சு, விருந் துண்ணல், பொருள் வரவு

**துலாம்**
செய்தொழில் வெற்றி, பிர யாணம், வீண்செலவு

**விருச்சிகம்**
உடல் நலக்குறை, மன உளைச்சல், பணவரவு

**தனு**
நம்பிக்கைக்குறை, முயற்சி தாமதம், துக்கம்

**மகரம்**
பணவரவு, குடும்ப சுகம், பிரயாணம்

**கும்பம்**
வாக்குவாதம், தொழில் நட்டம், தாய் வழி உறவு

**மீனம்**
உடல் நலம், காரியம் கை கூடல், நன்மதிப்பு

(பழைய நேரப்படி கணிக்கப் பட்டது)

வளவன்

# விளையாட்டு விழா

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் பாரதி சனசமூக நிலையமும் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் பாரதி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை பி.ப 2-00 மணிக்கு

32) மண்ணில் இருந்து நைதரசன் வெளியேற்றும் முறை

(1) விலங்குக் கழிவு மண்ணில் இடப்பட்டால் (2) இறந்த தாவரப் பகுதிகள் மண்ணில் சேர்தல்
(3) மின்னல் மழையின் போது (4) நைதரசன் இழக்கும் பக்ரீரியாவின் செயற்பாட்டால்

33) நீரின் மாறுநிலைக் கோணம் 42 பாகை அதன் மேற்பரப்பில் முறிவுத்தெறிப்பு நிகழும்போது படுகதிருக்கும் தெறிகதிருக்கும் இடைப்பட்ட கோணமாக இருக்கக்கூடியது

(1) 42 பாகை (2) 48 பாகை (3) 84 பாகை (4) 90 பாகை

34) ஒன்றிய வாழ்வுக்குரிய தொடர்பைக் காட்டும் அங்கிகள் எவை?

(1) குருவிச்சையும், மரமும் (2) இறைசோபியமும், அவரைத் தாவரமும்
(3) பனங்கற்றாளையும், பனைமரமும் (4) கஸ்குட்டாவும், கரும்பும்

35) சாதாரணமான ஓர் ஆணின் உடற்கலமொன்றின் கருவினுள் 22 நிறமூர்த்தசோடிகளுக்கு மேலதிகமாகப் பின்வருவனவற்றுள் யாது அடங்கியிருக்கும்?

(1) X அல்லது Y நிறமூர்த்தமொன்று (2) X நிறமூர்த்தசோடியொன்று
(3) Y நிறமூர்த்தசோடியொன்று (4) ஒரு X நிறமூர்த்தமும் ஒரு Y நிறமூர்த்தமும்

36) தூண்டல் கிடைக்கப்பெறும் திசையை நோக்கி ஏதேனும் தாவரப்பகுதி வளைகின்றதெனின் அவ் அசைவு?

(1) முன்னிலை அசைவு (2) இரசனை அசைவு (3) திருப்ப அசைவு (4) உறக்க அசைவு

37) பின்வருவனவற்றுள் எந்த உபகரணத்தில் காந்தக்கோட்பாடு பிரயோகிக்கப்படுவதில்லை?

(1) மின்மணி (2) மின்விளக்கு (3) செவிப்பன்னி (4) மின்விசிறி

38) இதயத் துடிப்பு சுவாசம் என்பவற்றை கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி

(1) மூளையம் (2) மூளி (3) வரோலின்பாலம் (4) நீள்வளையசுரம்

39) எமது கண்ணினுள் ஒளி புகவிடும் பகுதி அல்லாதது

(1) ஐரிசு (2) கண்மணி (3) வில்லை (4) நீர்மயவிடநார்

40) ஒரு திரான்சிற்றர் ரேடியோவில் சீராக்கியாகப் பயன்படுத்துவது

(1) திரான்சிற்றர் (2) செறிப்பன்னி (3) மின்கலம் (4) இருவாயி

நேற்றைய பத்திரிகையில் விஞ்ஞான மாதிரிவினாத்தாளில் 18 வது வினாவின் விடையில் ஏற்பட்ட பிழை திருத்தப்பட்டுள்ளது;

18) அமுக்கத்தை அளவிடப் பயன்படும் SI அலகு எது?

(1) மில்லிமீற்றர் இரசம் (2) சென்ரிமீற்றர் இரசம் (3) பஸ்கால் (4) நியூட்டன் மீற்றர்வர்க்கம்

சங்கமும் இணைந்து நடத்தும் பாரதி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை பி.ப 2-00 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா-செல்வராசா பிரதம விருந்தினராகவும் சு.ப.தெ.வ.அ.கூ. சங்கம் பொது முகாமையாளர் ஜே.பி குணரத்தினம் சமூக சேவை உத்தியோகத்தர் ஆர்.சிவயோகம் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் புன்னாலைக் கட்டுவன்கிராமசேவையாளர் சு.சிவதாசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர். [வ]

சமுர்த்தி......

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோப்பாய்

தனபாலலிங்கம் வசந்தரூபன் கோப்பாய்
சுப்பிரமணியம் சுகன்யா அச்சுவேலி
சேனாதிராசா சுதர்சன் நீர்வேலி
கந்தையா கஜனி கோப்பாய்
பொன்னையா கவிதா அச்சுவேலி
மகாதேவன் சுதர்சன் புத்தூர்
தர்மலிங்கம் தயாழினி அச்சுவேலி

# பொதுஅறிவுவினாக்கள்

**இல. 18 தொகுப்பு:- யூட்**

பின்வரும் நாடுகளின் தலை நகரங்கள் எவை

1) ஜோர்டான் ______
2) மொராக்கோ ______
3) சிரியா ______
4) ஸ்வீடன் ______
5) ஈராக் ______

பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

6) கொலம்பியா ______
7) சீனா ______
8) சுயான் ______
9) லெபனான் ______
10) ஹொங்ஹொங் ______
11) ஆட்றியாற்றிக்கின் ராணி என வர்ணிக்கப்படும் நாடு எது?
12) ஐரோப்பிய அணுசக்திக் குழு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
13) 75 வருடங்கள் நிறைவு விழாவை எவ்வாறு அழைப்பர்?
14) முதன் முதலில் சந்திரனில் மனிதன் காலடி வைத்தது எத்தனையாம் ஆண்டு?
15) உலகிலே மழை கூடிய பிரதேசம் எது?
16) இடது கை பழக்கமுடையோர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
17) இலங்கையில் தேசிய இயற்கை அழிவு முகாமைத்துவ நிலையம் நிறுவப்பட்ட ஆண்டு எது?
18) இலங்கையில் உயர் கல்விக்கென உயர் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
19) உலக போதை எதிர்ப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
20) முழுமையாக மின்சார ரயிலை சேவையில் ஈடுபடுத்தியுள்ள நாடு எது?
21) ஐரோப்பிய சமூகத்தில் சேர்ந்த முதலாவது முஸ்லீம் நாடு எது?
22) றேடியோவை கண்டுபிடித்த மார்க்கோணி எந்த நாட்டை சேர்ந்தவர்?
23) இலங்கையின் பன்னிரெண்டாவது பிரதம மந்திரியின் பெயர் என்ன?
24) இலங்கையின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் யார்?
25) இலங்கையின் பொருளாதார கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
26) இலங்கையின் 100 வது டெஸ்ட் போட்டியில் இலங்கையை எதிர்த்தாடிய அணி எது?
27) மருத்துவத்தில் CAT ஸ்கேன் அறிமுகப் படுத்தப்பட்ட ஆண்டு எது?
28) மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
29) காபன்-டை-ஒட்சைட்டை முதலாவதாக திரவமக்கிய விஞ்ஞானி யார்?
30) விண்வெளியில் சென்ற முதல் பெண்மணி யார்?
31) மிர் விண்வெளி ஆய்வுகூடம் எத்தனையாம் ஆண்டு அனுப்பப்பட்டது?
32) மைக்ரஸ்கோப்பை கண்டுபிடித்தவர் யார்?
33) நீலமலைகளின் நாடு என அழைக்கப்படுவது எந்நாட்டை.
34) மக்னா காட்டா எத்தனையாம் ஆண்டு கையெழுத்தானது
35) ஈரான் நாட்டு பாராளுமன்றத்தை எவ்வாறு அழைப்பர்?
36) ஒளியின் ஏழு நிறங்களை கண்டறிந்த விஞ்ஞானி யார்?
37) பி.ஸி. ஜியைக் கண்டுபிடித்தவர் யார்?
38) அமெரிக்க நாடுகளின் அமைப்பின் தலைமை நிறுவனம் எங்குள்ளது?
39) ஆபிரிக்காவின் தென் முனைவுக்கு புயல் முறை என பெயரிட்டவர் யார்?
40) மேரியும் பாலகனும் என்னும் ஓவியத்தை வரைந்தவர் யார்?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 24 - 08 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**அறிவியல் பகுதி வினா இல. 18**

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ........................
சொந்த முகவரி: ........................
கற்கும் பாடசாலை: ........................
மாணவர் கையொப்பம்: ........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்;

வறிய மக்களுக்கு

# வழங்கப்படும் நிவாரணப்பொருளின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும்

## பொது நிறுவனங்கள் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களின் அளவு போதாமல் இருப்பதாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஜூலை மாதத்துக்கான நிலைவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

பொதுவாக ஐந்துபேர் கொண்ட குடும்பத்துக்கு ஒரு மாதம் மூன்றுவேளை உணவிற்கு சராசரியாக 5 ஆயிரம் ரூபாய் தேவைப்படும். அதே சமயம் ஐவர் கொண்ட குடும்பத்துக்கு அரசினால் ஆயிரத்து 260 ரூபாவுக்கான உணவுப் பொருட்கள் மட்டுமே நிவாரணமாக வழங்கப்படுகின்றது. இத்தொகையானது சராசரிக் குடும்பத்தின்தேவையில் நான்கில் ஒரு பங்கினை மட்டுமே ஈடுசெய்கின்றது. மீதியான 3 ஆயிரத்து 740 ரூபாவை வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களினால் எவ்வாறு ஈடு செய்யமுடியும்?

அத்துடன் மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற காரணங்களினால் விவசாயம், மீன்பிடி, குடிசைக் கைத் தொழில்கள் போன்ற வருமானமீட்டும் திட்டங்களில் இத்தகைய குடும்பங்கள் ஈடுபடமுடியாத நிலையும். ஏற்பட்டுள்ளது என இணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

மாவட்டத்தில் பாதுகாப்பான பதுங்குகுழிகள் அமைப்பதற்காக எண்ணுக் கணக்கற்ற பனை, தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. இது விடயம் பற்றி பாதிக்கப்பட்ட மக்கள் தமது முறைப்பாடுகளை எங்கு தெரிவிப்பது எனத் தெரியாத நிலையில் இருக்கின்றனர்.

மேலும் ஒவ்வொருபிரதேச செயலர் பிரிவிலும் இருக்கக் கூடிய இடம் பெயர்ந்த குடும்பங்களின் பிரச்சினைகள் பற்றி உடனுக்குடன் ஆராய உதவும் பொருட்டு ''செயலணிகளை'' அமைக்கும்படி அரச அதிபரிடம் இணையம் வேண்டுகோள்விட்டிருந்தது:

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யூ என்.எச்.சீ.ஆர் நிறுவனம் 1200 கொட்டில்களையும், அகில உலககெயர் நிறுவனம் 600 கொட்டில்களை நிர்மாணித்து வருகின்ற போதிலும்கூட, இக்குறித்த திட்டத்திற்காக பயனாளிகளுடன் எத்தகைய கலந்துரையாடல்களும் நடாத்தப்படவில்லை. அத்துடன் 15 குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடமும் அமைக்கப்பட்டுவருவதாகக் குறிப்பிட்ட இணையம் 1995க்கு முற்பட்ட காலங்களில் 5 குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடத்திட்டமே அமுல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இத்தகைய திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்ற போது இத்துறைகளில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களின் ஆலோசனை பெறுவதில் அரச அதிகாரிகள் அக்கறைகள் காட்டுவதில்லை என்றும் இணையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# காரை நகரில் வீதியோர வியாபாரம் பொதுமக்கள் அதிருப்தி நிலையில்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் பகுதிவீதியோரங்களில் மீன் விற்பனை வெகுவாக அதிகரித்து வருவதால் இவ்வீதியால் பயணம் செய்யும்பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை சந்தித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கையினால் இப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் கூட தகுந்தநடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரியவில்லையென பொதுமக்கள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-75)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பா. உறுப்பினர் இருவர் இடைநிறுத்தம்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.ஏ. இலியாஸ், எஸ்.எஸ்.எம். அபூபக்கர் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களே இடை நிறுத்தப்பட்டவர்களாவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஸ்ரப் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ் இடைநிறுத்த உத்தரவினை வழங்கியிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, திங்கள் நடைபெறவிருக்கும் மேற்படி அமைச்சர்கள் மீதான ஒழுங்கு விசாரணைகளின் போது, தாம் கட்சியில் இருந்து விலக்கப்பட கூடாது என்பதற்கான காரணங்களை அரசியல் குழுக்களிடம் சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# பொது அறிவு வினா இல. 17

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

01) ச. சுஜன் நல்லூர்;
02) கி. காயத்திரி கொக்குவில்.
03) பு. உமாக்காந்தன் ஊரெழு.
04) ஜெ. சங்கீதா கோண்டாவில்.
05) இ. சயந்தன் வட்டுக்கோட்டை;
06) தி. ரசிகப்பிரியா யாழ்ப்பாணம்;
07) செ. உமா அச்சுவேலி.
08) வே. செந்தூரன் மானிப்பாய்.
09) பொ. பிரணவன் ஊர்காவற்றுறை;
10) செ. ஜெரீம் திரேஷன் வட்டுக்கோட்டை.
11) பெ. கிருஷாந்தன் கொட்டடி;
12) உ. அனித்தா உரும்பிராய்.
13) பி. சதீஸ்வரன் கல்வியங்காடு.
14) கே. பிரியவதனா நெல்லியடி.
15) பி. நிஷாந்தன் யாழ்ப்பாணம்;
16) சி. தாட்சாயினி நல்லூர்.
17) பொ. விமலேந்திரன் பருத்தித்துறை.
18) நி. கருணாகரன் சித்தன்கேணி.
19) வே. ஐங்கரன் சுன்னாகம்.

# பொது அறிவு வினா இல. 17 இற்கான விடைகள்

01) கிங்ஸ்டன்
02) வியன்டெயின்
03) போர்ட்லூயி
04) மட்ரிட்
05) மொன்டிவிடா
06) வோல்டா
07) பிரான்ஸிஸ் ஸ்மித்
08) எடிசன்
09) எலிசா ஜி. ஒடில்
10) டேவிட் புஷ்னெல்
11) அவுஸ்ரேலியா
12) ரோம்
13) தாமோதர் நதி
14) டட்ஸான்—டி—குன்கா
15) துருக்கி
16) ரீங்காரப்பறவை
17) ஒட்டகம்
18) ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி தாபனம்
19) வௌவால்
20) ஷெப்போர்ட் (மேர்குரி -3)
21) பொஸ்தோக்—1
22) பெஸோ
23) காபன்
24) ஆல்பட் ரோஸ்
25) 1988 ஒகஸ்ட்
26) மகேந்திர சௌத்திரி
27) பிரான்ஸ், பிரித்தானியா
28) முர்க்கோசுஅம்மையார்
29) மிருக இரத்தக் கொழுப்பு
30) கியோப்பஸ் பேரோ
31) ஐஸ்லாந்து
32) லண்டன்
33) 1960
34) சீனா
35) சர்வதேச கால் நடைகள் தினம்
36) 1985
37) T. B. பசிலஸ்
38) ஜெனரல் ஜாலியா சொலானா
39) ஜெனிவா
40) 1997 யூலை 31-ல்

# இலங்கைக்கு நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்கு 20 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று சர்வதேச அபிவிருத்தி முகவர் ஊடாக நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [ச]

## இன்று ஒரு தகவல்

# அளவுக்கு மீறிய ஆசையால் விளைவது அவலமே

ஆசை படுவதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்கு தகுந்த ஆசையாக இருக்கவேண்டும்.

தேவைக்கு மீறிய ஆசைகள் தேவையில்லாதவை; இந்தக் கருத்தை வலியுறுத்தும் கதை இது. ஒரு சமயம் தேவேந்திரனுக்கு திடீர் என்று வீடு கட்ட வேண்டும் என்ற ஓர் ஆசை வந்தது.

வீடு என்றால் நாம் கட்டுவது போன்ற சாதாரண வீடு இல்லை! தேவேந்திரன் வீடு என்றால் சும்மாவா?

ஒரு பிரம்மாண்டமான அரண்மனை கட்டவேண்டும், இது போன்ற அரண்மனை இந்த மூன்று உலகங்களிலும் கிடையாது என்று எல்லோரும் வியந்து பாராட்டும் வகையில் நான் கட்டும் அரண்மனை பிரமாண்டமாக அமைய வேண்டும் என்று இந்திரன் நினைத்தான்.

உடனே அவன் தேவதச்சரான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டான் உத்தரவு போட்டான்.

விஸ்வகர்மா தன்னுடைய உதவியாளர்களை எல்லாம் கூப்பிட்டு ஒன்றாகச் சேர்த்துக் கொண்டார். படாத பாடுபட்டு பிரமாண்டமான ஒரு பெரிய அரண்மனையை கட்டினார். அதைக் கட்டி முடிக்க ஆயிரம் வருடங்கள் ஆயிற்று தேவேந்திரன் வந்து அரண்மனையைப் பார்த்தான். அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை 'என்னுடைய அந்தஸ்துக்கு இது மிகவும் சாதாரணமான கட்டடம்! இதை விட இன்னும் பெரிதாகக் கட்டு! என்றான் தேவதச்சர் திணறிப்போய் விட்டார்... அவரால் அதற்கு மேலே எதுவும் செய்ய முடியவில்லை. 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தார். நேராக நாரதர் காலில் போய் விழுந்தார். 'நீங்கள் தான் என்னை இந்த பிரச்சினையிலிருந்து காப்பாற்ற வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

நாரதர் யோசித்தார். ''சரி கவலைப் படாதே'' என்று ஆறுதல் கூறி தேவதச்சரை அனுப்பி வைத்தார் பிறகு அவர் நேராக இந்திரனிடம் சென்றார்.

இந்திரன் நாரதரைப்பார்த்தவுடனே 'வாருங்கள்' என பக்தியுடன் வரவேற்று உபசரித்தான். பிறகு அவரை அழைத்துச் சென்று தான் கட்டிய அரண்மனையைக் காட்டினான்.

அவரிடம் இது போன்ற பெரிய ஓர் அரண்மனையை தாங்கள் இதுவரையில் வேறு எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? என்று மிகவும் பெருமையுடன் கேட்டான்.

'நான் பார்த்ததில்லை! ஆனால் என்னை விட வயதில் மூத்தவர் மகரிஷி லோமேசர் அவர் ஒரு வேளை பார்த்திருக்கிறாரோ என்னவோ?' என்றார் நாரதர் உடனே மகரிஷி லோமேசரை மனதில் நினைத்து நாரதர் தியானம் செய்தார் அடுத்த கணம் லோமேசர் அங்கே தோன்றினார். இடையில் ஒரு சிறிய துண்டு கையில் ஒரு கமண்டலம்... தலையிலேயே ஒரு பாய். அவ்வளவு தான் அவரிடம் இருந்தன.

''எதற்காகத் தலையிலே இந்தப் பாய்'' என்று இந்திரன் லோமேசரிடம் வினவினான்.

''என்னைப் போன்ற அற்ப ஆயுள் கொண்ட ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக் கொண்டு திண்டாட வேண்டுமா? இந்தப் பாய் தான் ஒரு வீடு போல் இருந்து எனக்கு நிழல் கொடுக்கிறது'' என்றார் அவர்.

''என்ன! உங்களுக்கு அவ்வளவு கொஞ்சமான ஆயுள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் இந்திரன்.

லோமேசர்! ''ஆமாம்! இதோ பார்... என் மார்பில் ஒரு பொற்காசு அளவுக்கு ரோமம் உதிர்ந்து விட்டது! எப்போது என் உடம்பிலுள்ள எல்லா உரோமங்களும் உதிர்ந்து விடுமோ அப்போது என் ஆயுள் முடியும்!''

இந்திரன் எப்போது அந்த உரோமங்கள் எல்லாம் உதிரும்?

லோமேசர்: ஒரு பிரம்மாவுக்கு 100 தேவ வருஷம்... ஒவ்வொரு தேவ வருஷத்திற்கும் 365 தேவ நாட்கள், ஒவ்வொரு தேவ நாளிலும் உன்னைப் போன்ற 14 இந்திரர்கள் தோன்றி மறைகிறார்கள்!''

இவ்விதம் லோமேசர் சொன்னதைக் கேட்டதும் இந்திரன் அப்படியே ஆடிப் போய் விட்டான்.

''இவ்வளவு அதிகமான ஆயுளைக் கொண்ட இவரே தம்முடைய ஆயுளை அற்ப ஆயுள் என்று சொல்கிறார்! அப்படியிருக்கும் போது நான் என்னுடைய ஆயுளைப் போய் பெரிதாக நினைத்துக் கொண்டு பிரமாண்டமான அரண்மனை கட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேனே...! என்று நினைத்துக் கொண்டான். அதைத் தொடர்ந்து அவன் தேவதச்சரை அழைத்து'' எனக்கு வீடு கட்டின வரைக்கும் போதும்! என்று சொல்லி விட்டான். ஆதலால் நாம் அனைவரும் நம்முடைய தேவைக்கு ஏற்ப ஆசைப்படுவது தான் நியாயம். ஆனால் நாம் அப்படியா நடந்து கொள்கிறோம்?

இல்லை அளவு மீறிய ஆசைகளால் விளைவது அவலமே. அவலம் நிறைந்த வாழ்வை விட ஆன்மீகம் நிறைந்த அமைதியான வாழ்வு நலம் நல்கும் மண் குடிசையென்றாலும் அங்கு நிலவொளி வீச மறுப்பதில்லையே.

தென்கச்சி சுவாமிநாதன்

# சவூதி அரேபிய இலங்கைத் தூதரகத்தில் 40 பணிப்பெண்கள் தஞ்சம்

## நாடு திரும்ப நடவடிக்கை

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த மேலும் 40 பணிப் பெண்கள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி 40 பேரும் இரு கட்டங்களாக நேற்றும் இன்றும் நாடு திரும்புவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுவருகின்றமைதெரிந்ததே.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்வோர் அங்கு அனுபவித்துவரும் பல்வேறு இடைஞ்சல்கள் காரணமாக சொந்த நாடு திரும்புவதில் நாட்டம் கொண்டிருப்பதும், இதுவரை இவ்வாறான பலர் நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நல்லையில் சொற் பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவகாலத் தெய்வீகநிகழ்ச்சிகள் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை ''ஆர் பெறுவார் அச்சசோவே'' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பி. ப. 2. 00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (செ)

## மஹோற்சவம் ஆரம்பம்

(கல்வியங்காடு)

வட்டு. கிழக்குப் பகுதியில் உள்ள துருட்டிப்பளை அம்மன் கோயில்மஹோற்சவம்கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10நாட்கள்சிறப்பாகநடைபெற்றது. [த-54]

## இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்க அங்கத்தவர், ஆளுநருடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி நிறுவனத்தில் நடைபெறும் என பாதிக்கப்பட்ட சங்கத் தலைவர் பா. மணிவண்ணன் தெரிவித்தார். (த)

## மண்ணெண்ணெய் விநியோகம் தாராளம்

[இணுவில்]

மருதனார்மடம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் தேவையான அளவு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகள், தமது விவசாய செய்கைக்கு தேவையான மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். (த-49)

## நிவாரண விநியோகம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ப.நோ. கூ. சங்கங்களில் 89 ஏ. பி. புள்ளிகளுக்கான நிவாரண விநியோகம் தற்போது இடம் பெற்றுவருகிறது. (உ-14)

## விளையாட்டுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளைசனிக்கிழமை காலை 9 00 மணிக்கு புளியங்கூடல் இந்து வாலிபர் சங்க முன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார் (செ-75)


## நெஸ்பிறே பால்மா விலை குறைப்பு

(கொழும்பு)

400 கிராம் நெஸ்பிறேமா பைக்கட் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நெஸ்பிறே ஸ்ரீலங்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்விலை குறைப்பின் பிரகாரம் 95 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் நெஸ்பிறே பைக்கட் இனிமேல் 90 ரூபாவாக விற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-உ)

## நல்லூரான் திருவடிக்கு - 14



### நிம்மதியாய் வாழ வழி காட்டு

நீயிருக்கும் பூமியிது
ஏன் சிவக்கவேண்டும்
நின்கதியை நம்பியவர்
ஏன் சிதறவேண்டும்
முற்பிறப்பில் செய்துவிட்ட
முழுவினைகள் யாவும்
இப்பிறப்பில் சூழ்ந்து எமை
வருந்துவது முறையோ
வண்டமிழால் வைதாரை
வாழவைக்கும் முருகா
கொண்டதெலாம் போனதையா
குமுறுகிறோம் பாராய்
ஏதிலிகளாகி நிதம்
ஓடாத வாழ்க்கை
இல்லமதில் இழப்புக்கள்
இல்லாத வாழ்க்கை
பாதியிலே பிஞ்சுகளைப்
பறிக்காத வாழ்க்கை
பஞ்சமொடு பசிபிணியும்
பற்றாத வாழ்க்கை
நீதிவடிவானவனே
நீ தரவும் வேண்டும்
நிம்மதியாய் வாழ
வழி காட்டிடவும் வேண்டும்.

செ. பவானி
வண்ணார்பண்ணை.

### தந்திடுவாய் நல்வாழ்வு

வாழ்வில் இருள் சூழ்ந்து
தினம் துயர் கொண்டு துடித்திடும்
மாந்தரைக் காத்திடுவாய் குமரா
வாழத்துடிக்கும் மனிதம் இங்கே
நோயற்று வாழ போரற்ற நல்
வாழ்வு தா குமரா.

வை. சசிக்குமார்

### நல்லூரானே!

ஈராயிர மாண்டு யினிதே
பிறந்ததையா நல்லூரானே - தீராத
ஓராயிரம் துயர்கள் எம்மை
சூழ்தேயிருக் குதையா நல்லூரானே!
பாயிரம் பல சொண்டு - உந்தனை
பாடிப் பணிந்திடுவோம் நல்லூரானே
பாதை தெரியாமல் சூழ்ந்தயிருளதனை
போக்கியருள் புரிந்திட ஐயா- நல்லூரானே!

இராம ஜெயபாலன்
கொக்குவில்

### பேசும் முருகன்

முருகன் திருவிளக்கு நாளும் விழிக்கும்
முருகன் திருமுகம் நாளும் கதைக்கும்
தமிழன் பூமியிலே அருளோசை கேட்கும்
தமிழின வீதியிலே முருகோசை பூக்கும்

செங்கூத்தன்
நெல்லியடி வடக்கு

### உத்தேச அரசியலமைப்பு

# சட்டமூலம் பற்றிய கருத்தரங்குகள் யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் சமர்பிக்கப்பட்ட உத்தேச அரசியல் சட்டமூலம் பற்றிய விவாதங்களை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அறிவியலாளர்கள், அரசியல் வாதிகள் உட்படபலரும் இவ்விவாதத்தில் பங்குபற்ற இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய அரசியல் கட்சி ஒன்று இவ்விடயத்தில் தீவிர ஆர்வம்காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளையில் மேற்படி சட்டமூலமானது ஏற்கனவே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டது மட்டுமன்றி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டமைஏற்கனவே தெரிந்ததே. (உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## கோவா மாநில காங்கிரஸ் கட்சியில் பிளவு ஐவர் பி. ஜே. பி. அணிக்கு ஆதரவு

(கோவா)

கோவா மாநிலத்தில் எதிர்க்கட்சியான மாநில காங்கிரஸ் பிளவுபட்டதை யடுத்து அக் கட்சியிலிருந்து ஐவர் வெளியேறியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணியினருடன் ஐவரும் ஒத்துழைக்கப் போவதாகவும் ஆனால் தங்களுடைய ஒத்துழைப்பு அரசுக்கு வெளியே இருந்து வழங்குவதாகவே அமையும் என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

அரசுடன் ஒத்துழைக்கும் இதேவேளையில் எந்தக் கட்சிகளுடனும் கூட்டுச்சேரப் போவதில்லை என்றும் கோவா மாநில காங்கிரஸில் ஏற்பட்ட அதிருப்திகாரணமாகவே தாங்கள் விலகியதாகவும் புரட்சிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## கோழித் திருட்டிற்கு இப்படியும்தண்டனை

(ஜகார்த்தா)

கோழி திருடியதாக கருதப்பட்டவரை தீமூட்டிக் கொன்ற கொடிய சம்பவம் ஒன்று இந்தோனேசியாவின் கிராமப் பகுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

கோழி ஒன்று காணாமல் போனமை தொடர்பாக, 50 வயதுநபர் ஒருவர் மீது சந்தேகம் கொண்ட ஊர்மக்கள், அந்த நபரை அடித்துத் துன்புறுத்திய பின்னர் வைக்கோற்போரில்கிடத்தி நான்கு பக்கமும் தீமூட்டி எரித்துக் கொன்றுள்ளனர்.

எனினும், கொல்லப்பட்ட நபர்தான் கோழியைத் திருடினார் என இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இப் பகுதியில் இதற்கு முன்பும் 17 பேர் அடித்துத் துன்புறுத்திய பின்னர் தீமூட்டிக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க மாற்றுத் திட்டங்கள் இல்லையாம்

### கர்நாடக முதல்வர் கிருஷ்ணா

(பெங்களூர்)

கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க மாற்றுத் திட்டங்கள் எதுவும் கர்நாடக அரசிடமோ தமிழக அரசிடமோ இல்லையென்று கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

இரு மாநிலங்களின் அரச பிரதிநிதியாகச் செல்லும் நக்கீரன்ஆசிரியர் கோபாலின் முயற்சிகள் நிறைவேறும் என்றும் கன்னட நடிகர் சங்கத்தினரையோ பொதுமக்களையோ காட்டுப்பகுதிக்குச் சென்று நடிகர் ராஷ்குமாரை வரவேற்க வேண்டாமென்றும் மேலும் தெரிவித்தார்.

கர்நாடகச் சிறைகளில் இருக்கும் 51 தடாக் கைதிகள் விடுவிப்பது குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இன்று அல்லது நாளையோ அவர்கள் விடுவிக்கப்பட இருக்கிறார்கள் என்றும் வீரப்பனின் மற்றைய கோரிக்கைகளும் விரைவில்நிறைவேற்றப்படுமென்றும் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா தெரிவித்தார்.

இதேவேளை தமிழக அரசு ஐந்து தீவிரவாதிகளை விடுவித்திருப்பதும் ராஜ்குமாரின் விடுதலைக்கு உந்து சக்தியாக இருக்குமென்றும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (து)

## ஒரிஸா பொலிஸாரால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆயிரம் ஆசிரியர் கைதாகினர்

[புதுடில்லி]

பொலிஸார் ஆசிரியர்கள் மீது

## கென்யாவில் கோர ரயில் விபத்து

## 7 பேர் பலி; 38 பேர் காயம்

(நைரோபி)

கென்யாவில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில்

உலக தரிசனம்

7 பேர் உயிரிழந்துள்ளனர் மேலும் 38 பேர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

வேலா ரயில்நிலையத்துக்கு 400 கிலோ மீற்றர் தொலைவில் மேற்படி ரயில் வந்து கொண்டிருந்த பொழுது அது தடம் புரண்டதால் இந்த விளைவு ஏற்பட்டதாகவும் சுமார் 400 பயணிகள் இந்த ரயிலில் பயணம் செய்து கொண்டனரென்றும் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை விபத்து நடந்த பொழுது பலத்த மழை பெய்து கொண்டிருந்ததாகவும்அதனையும் பொருட்படுத்தாது படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனரென்றும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## பிஜி இனக்கலவரத்தை விசாரிக்க புதிய ஆணைக்குழு நியமனம்

[சுபா]

பிஜியில் அண்மையில் நடந்த இனக்கலவரத்துக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிய விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று பிஜி ரைம்ஸ் என்ற பத்திரிகை கூறுகின்றது.

மேலும் அதில் பிஜியில் நடந்த இனக்கலவரத்திற்கும் இராணுவத்திற்கும் கட்சிகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா போன்றவற்றை இந்த விசாரணைக் குழு விசாரித்தறியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிஜியில் இது போன்ற கலவரங்கள் இனிமேலும் நடக்காமல் தடுப்பதற்கும் இந்த ஆணைக் குழுவின் அறிக்கை வழிசெய்யுமென்றும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

செய்திப்பரல்

★ காம்டேவிற் பேச்சில் தோல்வி கண்ட இஸ்ரேலும் பலஸ்தீனமும் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளன.

★ ஜப்பான் இலங்கை மீனவர்களுக்கு 350 வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன் வந்துள்ளது.

★ பிணையாளாக இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரி இந்தியா சென்றுள்ளார்.

★ பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி ஜெனீனா மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### உலக தரிசன அறிவுப் போட்டி- இல: 01

முழுப் பெயர் :-......................................................

முகவரி :-......................................................

......................................................

பிறந்த திகதி :-......................................................

போட்டியாளர் கையொப்பம்......................................

பெற்ற புள்ளிகள்

## பாகிஸ்தானுக்கு தகவல் கொடுத்த இந்திய விமானப்படை அதிகாரி செய்யது ஹசன்கூர் கைதானார்

கர்நாடக மாநிலத்தில் தேவாலயங்களில் தொடர் குண்டுவெடிப்புக்கு காரணமாக பாகிஸ்தானுக்கு இரகசியத் தகவல்களைக் கொடுத்தார் என்றதன் பேரில் இந்திய விமானப் படை அதிகாரி செய்யது ஹசன்கூர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் முக்கியமான இடங்களைப் பற்றிய தகவல்களையும் படங்களையும் மற்றும் அரச நிறுவனங்கள் பற்றிய தகவல்களையும் பாகிஸ்தானுக்கு கொடுத்தார் என்று தெரியவருகிறது.

50 வயதான கூர் ஹரியானாவில் குர்கானிலுள்ள அவரது வீட்டிலிருந்து கைது

## புதிய உறுதியுடனும் நம்பிக்கையுடனும் அமெரிக்கா திகழ்கிறது

### ஜனாதிபதி தெரிவிப்பு

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட அமெரிக்கா மிகவும் நம்பிக்க

றும் அவ்வுரையில் குறிப்பிட்டார்.

றிய தகவல்களையும் பாகிஸ்தானுக்கு கொடுத்தார் என்று தெரியவருகிறது.

50 வயதான கூர் ஹரியானாவில் குர்காவிலுள்ள அவரது வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளதாக கர்நாடக காவல்துறை தலைவர் தினகரன் தெரிவித்தார்.

ஹசன்கூர் பாகிஸ்தானுக்கு தகவல் கொடுத்ததை ஒப்புக்கொண்டுள்ளார் எனத் தினகரன் தெரிவித்தார். (து

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட
# ஆயிரம் ஆசிரியர் கைதாகினர்

[புதுடில்லி]

ஒரிஸா மாநிலத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது, ஆயிரம் ஆசிரியர்கள் ஒரிஸா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய அரசினால் ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியினை உடனடியாகவே வழங்கக்கோரி ஆறாயிரம் வரையிலான ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

அவ்வேளை அங்கு வந்த பொலிஸார் ஆசிரியர்கள் மீது தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனையடுத்து அங்கு கைகலப்புகள் ஏற்பட்டதாகவும் ஆசிரியர்கள் பலரை ஆண், பெண் வேறுபாடின்றி பொலிஸார் கைது செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதே சமயம்,

ஆசிரியர்கள் உடன் விடுதலை செய்யப்படாவிட்டால் மேலும் பல ஆர்ப்பாட்டங்களைச் சந்திக்க வேண்டிவரும் என ஆசிரியர்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

## அமெரிக்கா திகழ்கிறது
## ஜனாதிபதி தெரிவிப்பு

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட அமெரிக்கா மிகவும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருக்கிறது என்று ஜனாதிபதி பில் கிளிங்டன் பேசினார். புதிய ஜனாதிபதியக கட்சிசார்பில் அல்கூர் போட்டியிடுவதையொட்டி நடைபெற்ற மகாநாட்டில்உரைநிகழ்த்துகையில் பில் கிளிங்டன் மேலும் பேசுகையில், நாட்டின் வளர்ச்சி மேலும் தொடர வேண்டும் அதற்குத் தகுதியானவர் அல்கூர் என்றும் நாட்டில் முக்கியமான விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட போது பக்கபலமாக நின்றவர் இவரென்றும் அவ்வுரையில் குறிப்பிட்டார்.

இவர் நாட்டில் பொருளாதார வளர்ச்சியுடன் மருத்துவத்துறையையும் விருத்தியடையச் செய்வார் என்றும் பில்கிளிங்டன் அல்கூர் பற்றி எடுத்துக் கூறுகையில் தெரிவித்தார், [து]

# பாகிஸ்தானின் சதியே கர்நாடக குண்டு வெடிப்புகள்

(மைசூர்)

கர்நாடக மாநிலத்தில் பல கிறிஸ்தவ தேவாலயங்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்புகளுக்கு பாகிஸ்தானே பொறுப்பு என்று மாநில உள்துறை அமைச்சர் மல்லிகா அர்ஜுன் கார்கே தெரிவித்தார்.

இது குறித்த விரிவான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க பாகிஸ்தான் ஏற்படுத்தும் பாரிய சதியின் சிறு பகுதியே இந்த தேவாலயங்களின் குண்டுவெடிப்பென்றும் அமைச்சர் மல்லிகா அர்ஜுன் தெரிவித்தார்.

இந்த குண்டுவெடிப்புகளுக்கும் பாகிஸ்தானுக்கும் நேரடித் தொடர்பு இருக்கின்றதென்றும், ''தீந்தயான், சனாசை என்ற. தீவிரவாதக் குழுக்கள் இச்சம்பவங்களில் ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக் காட்டும் அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மல்லிகா அர்ஜுன் தெரிவித்தார். (து)

# டாரிங் கடற் பரப்பில் மூழ்கிய கப்பலிலிருந்து
# எவரும் உயிர் தப்பும் வாய்ப்பே இல்லை

## அமெரிக்க உளவு ஸ்தாபனம் தெரிவிப்பு

தென் பகுதி கடற்பரப்பில் மூழ்கியுள்ள ரஷ்ய அணுகுண்டுக்கப்பலில், எவரும் உயிரோடு இருப்பதற்கான சாத்தியங்கள் காணப்படவில்லை என அமெரிக்காவின் பெயர் கூற விரும்பாத உளவு ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமைகாலை மாபெரும் வெடிச்சத்தம் ஒன்று மேற்படி கடற்பரப்பில் கேட்டதாகவும் அதுவே இக் கப்பல் விபத்துக்குள்ளாகக் காரணமாக அமைந்திருக்கலாம் எனவும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலில் இருந்தவர்கள் தெரிவித்திருப்பதாக மேலும் அவ் உளவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதனிடையே மூழ்கிய அணுகுண்டு கப்பலில் இருந்த 116 மாலுமிகளை மீட்கும் வகையில் இரண்டாவது தடவையாக ரஷ்யா மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

மாலுமிகளை மீட்பதற்கென ரஷ்யாவின் சிறிய ரக நீர்மூழ்கிக்கப்பல் சென்ற போது,நிலவிய கடும் கடல் கொந்தளிப்பு காரணமாக மீட்பு முயற்சி இடையிலேயே கைவிடப்பட்டுள்ளது.

என்னும் மீட்பு முயற்சிகள் தொடரும்என ரஷ்ய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இம்முயற்சிகளைமுழு மூச்சாக முன்னெடுக்கும் வகையில் நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் அவசர உதவிகளையும் ரஷ்ய அரசு கோரியுள்ளது; (உ)

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்

-குறள்

# வலம்புரி

## எண்ணத் துணிவு

ஒரு நாட்டின் உண்மையான ஜனநாயகத்தின் தொழிற் பாட்டுத் தன்மைக்கு எண்ணத்துணிவு அவசியமாகிறது. ஜனநாயகம் என்பது மாறுபடும் கருத்துக்களுக்கிடையே ஒருமைப் பாட்டைக் காண்பதே அன்றி ஒருவர் கருத்தை ஒருவர் மீது திணிப்பதல்ல. அதற்கு இணக்க உணர்வும் துணிவும் அவசியம். இக்கருத்துக்கள் பழுத்த பேராசிரியர் சிவத்தம்பியினுடையது. கலை உள்ளங்கொண்ட சிவத்தம்பி மக்களுக்காகமனங்கசிவது இயற்கையே.

குறைகள் நடைபெறும் போது குரல் கொடுக்கின்றவர்கள் அருகி விட்ட அரசியல்களமே இன்று காணப்படுகிறது. இடித்துரைக்கின்ற அமைச்சர்கள் இல்லாத அரசு ஆட்டங் காணும் என்பது வள்ளுவன் கருத்து. தன்னலம் நிரம்பிய அரசியல் வாதிகள் தவறுகளைத் தட்டிக் கேட்காது வாளா விருப்பதால் விளைந்த அவலங்களே இன்றைய நாட்டின் துன்பங்களுக்குக் காரணமாகும்.

சாதனைக்கு ஒருவரில்லாப்பூமி இது. போதனை மலிந்து விட்டவெண்கலக் கடை. அதனுள் அட்டகாசம் புரியும் அலியாக்கள் திருந்தாவிட்டால், அல்லது அழியாவிட்டால் எங்கள் நாட்டிற்கு விடிவு வெகு தூரத்தில் தான். இல்லை விடிவு தூரம் கொடுவானமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனநாயகம் என்ற புனித பதத்திற்கு முலாம் பூசி ஏமாற்று வித்தை காட்டக் கூடாது. தானும் கெட்டு பிறரையும்

# சமுர்த்தி எழுதுவினைஞர் நேர்முக 'பரீட்சைக்குத் தெரிவானோர்

## பிரதேச செயலர் ரீதியாக

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சமுர்த்தி எழுதுவினைஞர் பதவிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் சனிக்கிழமை 19 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் (கச்சேரி) உள்ள யாழ்ப்பாணப்பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று யாழ். மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகமைச் சான்றிதழ், கிராம சேவகர் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவகர் நற்சான்றுப்பத்திரம், தேசிய விசேட அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விபரங்கள் வருமாறு:

**வேலணை**

நவரட்ணம் தேவதாஸ் வேலணை கிழக்கு
நவரட்ணம் சாந்தரூபன்- வட்டார இல. 03 நயினாதீவு
மலர்விழி ராஜரட்ணம்- வட்டார இல. 08 மண்டைதீவு
முத்துலிங்கம் சுபாசினி- வட்டார இல. 06 நயினாதீவு
அமுதலிங்கம் அமுதினி - சரவேலணை கிழக்கு வேலணை
கருணாகரன் பிரபாகரன் - வேலணைகிழக்கு
வராஜினி கேதீஸ்வரன்- வட்டார இல. 05 வேலணை
கருணாநிதி கவிதா மானிப்பாய்
அந்தோனிப்பிள்ளை டெனி கொனிரஸ் பண்டத்தரிப்பு

**தெல்லிப்பழை**

சிவநேசன் தர்சினி சுன்னகம்
தில்லையம்பலம் யசோதா அளவெட்டி மத்தி
சின்னத்தம்பி தயாபரன் தெல்லிப்பழை
தில்லை விநாயகம் சசிகுமார் மானிப்பாய்
பாலசுப்பிரமணியம் பாஸ்கரன் இணுவில்
தியாகராசா பிரபாகரன் மல்லாகம்
தம்பிராசா பார்த்தீபன் பண்டத்தரிப்பு

**சங்கானை**

சிற்சபேசன் ஜெயதர்சினி வட்டுக்கோட்டை
ராமலிங்கம் அகிலன் வட்டுக்கோட்டை
மைசூர்நாதன் தர்மினி சித்தங்கேணி
சிவானந்தன் நிரஞ்சன் வட்டுக்கோட்டை
கந்தசாமி சிவகுமார் சுழிபுரம்
வைரவநாதன் சுரேந்திரன் அராலி
சபாரட்ணம் ஜெயபிரகேஷ் அராலி

**சண்டிலிப்பாய்**

பொன்னையா சிவகுமார் மானிப்பாய்
அருள்பிரகாசம் அருள்வதன் சண்டிலிப்பாய்
விஜிதா கந்தசாமி மானிப்பாய்
ராயப்பு லனிஸ்ரன் முகேஷ் மானிப்பாய்
நல்லதம்பி தர்மினி சண்டிலிப்பாய்

**சாவகச்சேரி**

செல்வராஜா ராஜேஸ்வரன் சாவகச்சேரி
வேலாயுதபிள்ளை சிவகரன் கொடிகாமம்
நிசாந்தன் பிரதீபன் கொடிகாமம்
ஆர். சிவசுதர்சினி மீசாலை
ஸ்ரீபன் ஜோட்ஸ் தர்சினி சாவகச்சேரி
சிவகுரு அகிலதாஸ் மிருசுவில்
மார்க்கண்டு ஜெயமோகன் மீசாலை

**மருதங்கேணி**

மாசிலாமணி வாசுகி நாகர் கோவில்
சிவானந்தம் கோமகன் குடத்தனை
அன்ட்ரியா குமுதினி தாளையடி
தங்கராசா வதனவேணி செம்பியன்பற்று
நாகலிங்கம் துஷ்யந்தினி செம்பியன்பற்று
கந்தசாமி சிவரூபிணி தாளையடி
சுப்பிரமணியம் சுதேஷ்வரன் செம்பியன்பற்று

**ஊர்காவற்றுறை**

ஆனந்தநாதன் ஆனந்தரூபி ஊர்காவற்றுறை கிழக்கு
நவரட்ணம் ராஜசிவம் காரைநகர்
சிதம்பரப்பிள்ளை கங்காதரன் காரைநகர்
குணரட்ணம் யூடே சீனா சுருவில் வீதிஊர்காவற்றுறை
குழந்தைவேலு ஞானேஸ்வரன் பருத்தியடைப்பு ஊர்காவற்றுறை
ஏ.யூலியட் பெலிசியா ஊர்காவற்றுறை கிழக்கு
ஞானசம்பந்தன் செந்தமிழ்ச்செல்வன் புளியங்கூடல் ஊர்காவற்றுறை

**நெடுந்தீவு**

கோபாலசிங்கம் புஸ்பலதா வட்டார இல.2, நெடுந்தீவு
பசுபதி கேதீஸ்வரன் வட்டார இல. 01 நெடுந்தீவு
பரமேஸ்வரன் மோகனா வட்டார இல. 03 நெடுந்தீவு
சதாசிவம் தவறஞ்சினி வட்டார இல.05 நெடுந்தீவு
அடைக்கலமுத்து லலிநிஷானி வட்டார இல. 06 நெடுந்தீவு
கிறிஸ்தோபர் தியாகருமார் வட்டார இல.01 நெடுந்தீவு
சிங்கராஜர் விமலராணி வட்டார இல. 10 நெடுந்தீவு

**உடுவில்**

தர்மராஜா சுசீந்தராஜ் மானிப்பாய்
கனகரட்ணம் பவானி ஏழாலை
கந்தசாமி கௌரி சுன்னாகம்
கனகரட்ணம் விஜயலதா ஏழாலை
காசிநாதர் கவிதா சுன்னாகம்
தம்பிராசா சுமதி ஈவினை

# யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு

# மிகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு

## பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்காக மிகக் கூடுதலான நிதி கல்வி அமைச்சு, வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் போன்றவற்றின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டுக்கான அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றதா என்பதைக் குறிக்கும் முன்னேற்ற அறிக்கையை கல்வித்திணைக்கள அதிகாரிகள் தாமதமின்றி எமக்கு அனுப்பி வைக்க வேண்டும். 1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் இது தொடர்பான அறிக்கைகள் எதுவும் எமக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வாண்டு வரையிலான கல்வி முன்னேற்ற அறிக்கையை எமக்குச் சமர்ப்பித்தால் கல்வி அபிவிருத்தித் தொடர் நட

களத் தலைவர்கள் சுமார் 22 பேர் கலந்துகொண்டனர்.

மற்றும் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், யாழ் மாவட்டத்திணைக்கள அதிகாரிகள், ஈ.பி.டி.பி கட்டுப்பாட்டிலுள்ள பத்து பிரதேசசபைகளின் தலைவர்களும் ஏனைய ஆறு பிரதேச சபைகளின் ஈ.பி டி.பி. உறுப்பினர்களும் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சிலரும் பங்குபற்றியிருந்தனர்,

இக் கூட்டத்தில் தவராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ். உயர் பல்தொழில் நுட்பக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றினை நிறுவுவதற்கு கோண்டாவிலில் 90 பரப்புக் காணி பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எப்போதோ

தீர்மானிக்கப்பட்டது. அதில் சுமார் 571 பேருக்கு மட்டுமே யாழ்ப்பாணத்தில் நியமனம் வழங்கப்பட்டது-

ஆரம்ப ஆசிரியர் பற்றாக்குறையுள்ள யாழ்ப்பாணத்தில் ஏன் மீதியாகவுள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி விளையாட்டு விவகார அமைச்சின் செயலாளர் கே. பரமேஸ்வரன் அங்கு குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள கல்வியியற் கல்லூரிக்கான நிர்வாக பீடம், விரிவுரை மண்டபம், மாணவர் இருப்பிடம், மற்றும் விரிவுரையாளர்கள் தங்குமிடம் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு உலக வங்கி 443 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கில்லை.

ஜனநாயகம் என்ற புனித பதத்திற்கு முலாம் பூசி ஏமாற்று வித்தை காட்டக் கூடாது. தானும் கெட்டு பிறரையும் கெடுக்களண்ணக்கூடாது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது வரலாறு தந்த பாடம்.

பாராளுமன்றங்களில் மக்கள் குறை போக்க குரல் கொடுக்கவேண்டும். நீதியை நிலை நாட்ட நாவை அசைக்க வேண்டும். தன்னலம் காக்க தலையசைத்து முதுகு சொறியக் கூடாது. அல்லாதவர்கள் அங்கு செல்லாதிருப்பது பெருநன்மையைத் தரும்.

அர்த்தமுள்ள அரசியல் வாழ்க்கை மண்ணிலே தழைக்குமானால் மக்கள் நிம்மதி அடைவர். மண் செழிக்கும். அகதி வாழ்வு அகலும். ஒரவஞ்ச நாடகத்தை நடத்திக்கொண்டிருந்தால் யானை தன் தலையில் மண்ணை வாரி இறைப்பது போன்றநிகழ்வுக்கு இட்டுச் செல்வதாக அமைந்து விடும்.

பழைய பல்லவிகளை விடுவோம். உண்மை நிலையை உணருவோம். செந்நெறி பற்றிச் செல்வோம். மக்கள் ஏற்றுக்கொண்டால் பணி செய்வோம் என்ற தூயநிலை உருவாகட்டும்.

அன்புடன் ஆசிரியர்

ஆண்டுக்குப் பின்னர் இது தொடர்பான அறிக்கைகள் எதுவும எமக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வாண்டு வரையிலான கல்வி முன்னேற்ற அறிக்கையை எமக்குச் சமர்ப்பித்தால் கல்வி அபிவிருத்தித் தொடர் நடவடிக்கைக்குப் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறு இரண்டாவது நாளாக நேற்றுமுன் தினம் (புதன்) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ். தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய ஈ.பி.டி.பி.யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணியும் எம்.பி.யுமான வி. தவராசா கூறினார்.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த இரண்டாவது நாள் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் ஜீ. கிருஸ்ணமூர்த்தி உட்பட திணைக்

யாழ். உயர் பல்தொழில் நுட்பக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றினை நிறுவுவதற்கு கோண்டாவிலில் 90 பரப்புக் காணி பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எப்போதோ அமைச்சின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் யாழ்ப்பாணத்தில் உள்ள விலை மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக குறித்த காணி இன்னமும் கொள்வனவு செய்யப்படாமல் இருந்து வருகின்றது. இதற்குரிய தாமதத்தை விரைவில் நீக்கி இவ்வாண்டுக்குள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாழ். உயர் பல்தொழில் நுட்பக்கல்லூரி இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ், பிராந்திய நிலையம் ஆகியன தமது தேவைகள் குறித்து உரிய மகஜர்களை எம்மிடம் கையளித்தால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என உறுதியளித்தார்.

மேலும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 2 ஆயிரம் தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் அதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள 1015 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் எமது கட்சியின் சிபாரிசின் பேரில்

விரிவுரை மண்டபம், மாணவர் இருப்பிடம், மற்றும் விரிவுரையாளர்கள் தங்குமிடம் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு உலக வங்கி 443 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி மேற்படி திட்டங்களை 2003ஆம் ஆண்டுக்குள் பூர்த்திசெய்தல் வேண்டும் எனவும், இங்குள்ள அரசாங்க பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இங்கே தயாரித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகின்றது என்றும் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையிலுள்ள பாடசாலைகளை நடத்துவதற்குரிய தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்கு 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பங்குகொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் சார்பில் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் கடலில் மூழ்கடிக்கப்பட்ட உஹண கப்பலுக்குரிய நட்டஈட்டினைப் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக மேற்கொண்டு தரல் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(உ-03-12-77)

கனகரட்ணம் பவானி ஏழாலை
கந்தசாமி கௌரி சுன்னாகம்
கனகரட்ணம் விஜயலதா ஏழாலை
காசிநாதர் கவிதா சுன்னாகம்
தம்பிராசா சுமதி ஈவினை
மாசிலாமணி சிவகுமார் சுன்னாகம்

### யாழ்ப்பாணம்

சூசைதாசன் கஜனிற் கயிலாஸ் யாழ்ப்பாணம்
சோமசுந்தரம் ஜெயகணேசன் கொட்டடி
ஒலிவற் ஜெனிவா கணேசியன் சுண்டுக்குளி
இபிலியா துஷ்யந்தி மரியநாயகம் மொறிஸ் யாழ்ப்பாணம்
வரதராஜன் பிரதீபன் சுண்டுக்குளி
நொலாஸ்கோ அன்னப்பிள்ளை நாவாந்துறை
தனபாலசிங்கம் சசிதரன் கொட்டடி

### நல்லூர்

கந்தசாமி சசிதரன் திருநெல்வேலி
செல்வநாயகம் அருள்குமரன் திருநெல்வேலி
சிறிதரன் சோபனா கொக்குவில்
செல்லையா நிமலரூபன் திருநெல்வேலி
சிவகுமார் நீரஜா கொக்குவில்
மகாலிங்கம் காயத்திரி கொக்குவில்
ஜீவலதா ஜெயக்குமார் ஜீ.பி எஸ். வீதி, கல்வியங்காடு

( 8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண
நூலகத்துறைப் படிப்பகம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளிலுள்ள

# அரை குறைக் கட்டடங்களை கட்டிமுடிக்க உடன் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]
யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் முடிவுறாத நிலையிலுள்ள கட்டடங்களை உடனடியாகக் கட்டிமுடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட தலைமையலுவலகத்தில் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, கே.வி. குகேந்திரன் என். மதனராஜா மற்றும் யாழ்.அரசஅதிபர் க. சண்முகநாதன், திட்டமிடல்அமைச்சின் செயலாளர் எஸ். தங்கராஜா மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செயலாளர் பரமஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் பாடசாலைகளில் அரைகுறை நிலையில் கட்டடங்கள் இருப்பின் அது பற்றிய விபரங்களை] உரிய அதிபர்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளையிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் விபரங்கள் சேகரிக்கப்பட்டதும் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்தார். வலயக் கல்விப்பணிப்பாளர்கள் அதிபர்கள் கல்வி சார்ந்த பல்வகைப் பிரச்சினைகளை இக்கூட்டத்தில் எடுத்துக்கூறினர். (ந-3)

## மீனவர் பிரச்சினை குறித்து டக்ளஸ் - படைத்தளபதி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ், குடா நாட்டில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா 512வது பிரிகேட்டின் படைத்தளபதியைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது மீனவர்களால் கடலில் விடப்பட்ட வலைகளையும் வள்ளங்களையும் மீள எடுத்து வருவதற்கு அனுமதி வழங்குவதென கட்டளைத் தளபதி உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில் பாராளுமன்றஉறுப்பினர்களான எஸ். தவராஜா, என். மதனராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மீனவர் பலி

மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் அல்பிரட் வின்ரன் பீரிஸ் (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார். [ந-7]

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அபூபக்கர் எம். பி. இராஜினாமா

### சுதந்திரக் கட்சியில் இணைவாரா?

[மட்டக்களப்பு]
முஸ்லிம் காங்கிரஸில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அபூபக்கர் எம்.பி. தாம் அக்கட்சியிலிருந்து இராஜினாமா செய்வதாக கட்சியின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அபூபக்கர் முதலில் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்த பின்பே கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டுமெனவும் அதுவரை இராஜினாமா கடிதத்தை ஏற்கமுடியாதெனவும் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை அபூபக்கர் விரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்] [ந]

## அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப்பேரணி

அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று கொழும்பில் நடத்தப்பட்டது.

இப்பேரணியைதாயகத்தை பாதுகாக்கும் அமைப்பு முன்னின்று நடத்தியது இதில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா, மற்றும் இனவாத அமைப்புக்களும் கலந்து கொண்டன.

இவ் ஊர்வலத்தில் சுமார் ஆறாயிரம் மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேனனாயக்கா கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வணிகசேகரா யாழ்.பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இந்த இடமாற்றங்கள் நாளை மறுதினம் முதல் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## அர்ச்சுனா அனுரா சந்திப்பு

சிங்கள உறுமயக் கட்சியில் இணைந்துள்ள கிரிக்கட்வீரர் அர்ச்சுனா ரணதுங்காவை கம்பஹா மாவட்ட எம்.பி அனுரா பண்டாரநாயக்கா நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் என்ன பேசினார்கள் என்ற விபரம் வெளியிடப்படாத போதும், தனிப்பட்ட முறையில் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

மக்கள்...
கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஜி. கிருஸ்ணமூர்த்தி பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் திருமதி கே. சிவசிதம்பரம் உட்பட கல்வி அமைச்சு, பொது நிர்வாக கூட்டுறவு அமைச்சு, விவசாய அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களும் கலந்து கொள்வர்.

இதேவேளை இச்செயலமர்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, எஸ்.தவராஜா, கே. வி. குகேந்திரன் என். மதனராஜா, ஆகியோரும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் எஸ். ஆர். டி. வேதநாயகமும் கலந்து கொள்வார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ந-2]

---

சுதந்திரக்...
செயலாளர் பதவிக்கு போட்டிநிலவியமையால் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் எஸ். பி. திஸநாயக்க செயலாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பேராசிரியர்விஸ்வவர்ணபால பாராளுமன்ற உறுப்பினர் விஜயமுனி சொய்ஷா ஆகியோர் உப செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் தலைவராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்தும் பதவி வகிப்பார் பிரதித் தலைவராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-2)

---

அமைச்சர்...
அணிக்கும் வரதராஜப்பெருமாள் அணிக்குமிடையே நிலவும் சர்ச்சையை இருதரப்பும் விரும்பினால் தீர்த்து வைப்பதற்கு தான் தயாராக இருப்பதாக அமைச்சர் அஷ்ரப் வரதரிடம் தெரிவித்துள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்தும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் வரதருடன் அஷ்ரப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

திருத்த...
ளதாக கப்பல் கம்பனியின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

திருத்தவேலைகள் காரணமாக ஒரு வாரத்துக்கு பயணிகள் கப்பல் சேவை நடைபெறாதென 'வலம்புரி' வெளியிட்ட செய்தி உண்மையானதெனவும், எனினும்

நல்லூர் திருவிழாவை ஒட்டி கப்பல்சேவை நீடிக்க வேண்டியிருப்பதால் செப்ரெம்பர் முதல் வாரத்தில் திருத்த வேலைகளுக்கு கொழும்புக்கு சிற்றி ஒவ்றிங்கோ அனுப்பிவைக்கப் படலாம் என்றும் கப்பல் உரிமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது கப்பல் பயண ஒழுங்குகள் தங்குதடையின்றி நடைபெறுவதாகவும் பயணத்தை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்து கொடுத்திருப்பதாகவும் கப்பல்பயணச் சீட்டுவழங்கும் யாழ் முகவர் தெரிவித்துள்ளார். (வ)

---

வவுனியா...
அவரது சாரதியும் பறப்பட்டு வரும் போது சிற்றுண்டிச் சாலையின் அருகில் நின்றிருந்த முச்சக்கர வண்டியுடன் காத்திருந்த தற்கொலையாளி தனது நெஞ்சினுள் மறைத்து வைத்திருந்த வெடி குண்டின் மூலம் தற்கொலைத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்துள்ளது.

இக் குண்டுத் தாக்குதலை அடுத்து வவுனியா நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் சில வீதிகள் தடை செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தார், (வ)

---

பாராளுமன்...
அதற்கு ஆதரவு வழங்கலாம் என்றும் சிறுபான்மை மக்களது பிரதிநிதித்துவத்தை இல்லாமல் நாம் செய்ய முடியாது எனவே நாம் இதனை ஆதரிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இச்சட்ட திருத்த மூலத்திற்கு ஈ.பி.டி.பி. தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருடனும் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அதன்பின்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

---

விட்ட இடத்தில்......
அமைப்பில் அங்கம் வகிக்கும் நோர்வேயின் முன்னாள் பிரதமர் தொடர்ந்து உரையாற்கையில்:

சமாதான முயற்சியைஎந்த வகையிலும் பின்தள்ளி விடக்கூடாது. சமாதானப்பேச்சு வார்த்தை எங்கு ஆரம்பித்தாலும் அதற்கு நான் கை கொடுத்துதவத் தயாராக இருக்கிறேன்.

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வேண்டுகோளுக்கு அமைய நோர்வே அரசு சமாதான முயற்சியில் ஈடுபட்டது.

நோர்வே அரசைப் பொறுத்த வரையில் எந்த விதமான பிரதி பலனையும் பெறும் நோக்கமாகக் கொண்டு சமாதான முயற்சியில் ஈடுபடவில்லை

இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டுமென்றுதான் நோர்வே அரசு விரும்புகிறது என்றும் அதற்குதனது பூரண ஆதரவு உண்டு என்றும் நோர்வேயின் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பேசுகையில் கூறியதாவது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒரு போதும் சாத்தியப்படமாட்டாது விடுதலைப்புலிகளுடன் பேசிசமாதான முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டும் அனைத்துத் தரப்பினரும் பேசி ஒரு முடிவுக்கு வருவார்களானால் அந்த முயற்சிக்குத் தாம் ஆதரவு தருவோம் என்றும் வெளிவிவகார அமைச்சர் இறப்பதற்கு ஒருவார காலத்துக்கு முன்பும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுவார்த்தைநடத்தி வந்துள்ளார்கள் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜி எல் பீரிஸ் பேசுகையில் ஏ.சி எஸ் ஹமீத் போன்ற ஒரு நல்ல அரசியல் வாதியைக் காணமுடியாதென்றும் அனைத்து அரசியல் வாதிகளுக்கும் உதாரணமாகத் திகழ்ந்தவர் என்றும் கூறினார்.

அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் பேசுகையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நீண்டகாலம் பேசுவதில் பயன் இல்லை. இதனை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று கூறினார்,

---

இளிதொச்சி...
இதேவேளை 96ஆம்ஆண்டு முதல் 98 ஆண்டு வரையில் காணாமல் போன 184 பேரில் 55 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
அறிவித்தல்
பௌதிகவிஞ்ஞான
வெற்றிடம்
நிரப்புப்பட்டியல்
1999/2000

மேற்படி கற்கை நெறிக்கு யாழ். பல்கலைக் கழகம் வவுனியா வளாகத்திற்கும் ராஜரட்டைபல்கலைக் கழகத்திற்கும் பிரயோக விஞ்ஞான கற்கை நெறிக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் இருந்து தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் தெரிவானோர் விபரம் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 25.08.2000க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
(9724)

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
லிவிங்ஸ்டன்
கௌசல்யா நடித்த
சொல்லாமலே
காட்சி நேரம்
பி.ப 8.30 மணி
(8/652)

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
பிரசாந் சிம்ரான்
நடித்த
பார்த்தேன்
ரசித்தேன்
CD பிரதி (புதியவெளியீடு)
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[8 688]

இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] நிறுவனத்தாரால் இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.